26th October 1957]

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்த வொர்க்ஷாப்பில் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கும் லட்சோப லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். ஆனால் இது மாதிரி பல திட்டங்களும் ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. வைகை பிராஜக்டில் மதுரை சிறையில் இருக்கும் கைதிகளை கொண்டு வேலைக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri P. S. CHINNADURAI : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து சிறைச்சாலைகளில் பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு கொடுப்பது மிக குறைந்த சம்பளம் என்று தெரியவருகிறது. ஒரு அணு என்று சொல்லுவது ரொம்பவும் குறைவானது. சாப்பாடு, துணி முதலியன கொடுத்தபோதிலும் அவர்களுக்குரிய அசல் ஜீவன சம்பளத்தையாவது கொடுத்து அவர்கள் சிறையைவிட்டு வெளியேறும்போது ஒரு கணிசமான தொகையை அவர்கள் பெறும்படியான ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த சிறை கைதிகளிடத்தில் வாங்கப்படுவது அசல் வேலை அல்ல. இவர்களுக்கு அங்கேயே ஸ்திரமாக வேலை கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. ஒரு செட் பயிற்சி முடிந்து ஆறு மாதத்திற்குப் பிறகு இன்னொரு செட் கொண்டு வரப்படுவார்கள். இவ்விதம் தான் வேலை கொடுக்கப்படுகிறது.

Sri M. P. SUBRAMANIAM : சிறை கைதிகளுக்கு வேலை கொடுத்து வருவது வரவேற்கத்தக்கதுதான். இதை மற்ற மாவட்டங்களிலும், குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள வேலைகளை செய்வதற்கு இம்மாதிரி தண்டனைபெற்ற கைதிகளை உபயோகப்படுத்த அரசாங்கம் ஏதாவது ஒரு முறையை கையாளுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த திட்டத்தை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்றுள்ள திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துகொண்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Sir, does not this change of environment, that is, this kind of taking the convicts from the Central Jail to the workshop of the Bus Transport amount to some sort of mental and psychological satisfaction to the convicts themselves and have they not expressed the opinion that they are willing to work in such environment?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That is exactly the reason why Government are adopting this method and I have no doubt that the prisoners are feeling fairly satisfied with this change.

Medical Officers sent for advanced studies

* 3 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have issued any orders during 1957 to the effect that Medical Officers employed in hospitals should not be sent to foreign countries for advanced study in medicine; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[26th October 1957

Sri N. K. Palanisami : ஸார், சர்க்கார் இரண்டு மாதத்திற்கு முன்னுல் இந்த மாதிரி வைத்திய இலாகாவிலுள்ளவாகள் மேல் படிப்புக்கு போய் அதிக நிபுணத்துவம் பெற வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடாது என்று ஒரு ஜி.ஓ. போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

Mr. Speaker : இந்த கேள்விக்கு பதில் அவசியமில்லை என்று கருதுகிறேன்.

Examination of Neiveli Lignite by United States Bureau of Mines

* 4 *Q.*—**Sri N. K. Palanisami** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the lignite available in South Arcot has been sent to America; and

(*b*) if so, the results thereof?

The Hon. Sri R. Venkataraman : (*a*) Yes, Sir. Samples of lignite found in South Arcot district were sent to the United States Bureau of Mines, Washington.

(*b*) The preliminary report received from the United States Bureau of Mines revealed that South Arcot lignite was chemically similar to the high moisture lignites found in the United States and that it had some physical properties similar to Australian brown coals; that it should be possible to make briquettes from a mixture of partially dried lignite and high volatile char and that briquettes made from lump char with pitch binder could be carbonised to produce briquettes that might be strong enough for use in short shaft blast furnances or wrought iron cupolas. The Bureau has stated that further research in this regard would have to be made. Their final report is awaited.

Sri N. K. Palanisami : இதில் சர்க்கார் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிருர்கள் ?

The Hon. Sri. R. Venkataraman : நான் பதிலில் கூறியபடி அமெரிக்காவுக்கு அனுப்பியதில் முதல் ரிப்போர்ட்டு வந்திருக்கிறது. இதை தவிர வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலும் லிக்னைட் உபயோகப்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. ஜெர்மனிக்கும் பழுப்பு நிலக்கிரியை அனுப்பி அதனுடைய ரிப்போர்ட்டையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருேம்.

Sri A. Govindasamy : இந்த பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரத்தை மாத்திரம்தான் உண்டுபண்ண முடியுமா ? ஸ்டீல் உருக்கு போன்றவைகளுக்கும் பயன்படுத்த முடியுமா ?

The Hon. Sri R. Venkataraman : இந்த பழுப்பு நிலக்கரியை வைத்து மின்சார உற்பத்தியும் செய்யமுடியும். இரும்பு உருக்கு போன்றவைகளுக்கு உபபோகப்படுத்த ஜெர்மனியில் ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் கொண்டு வரவேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri S. Lazar : இந்த அமெரிக்க நிபுணர்களின் ஆராய்ச்சியின்படி ஏற்கனவே பல திட்டங்களுக்கு நிலக்கரியை உபயோகப்படுத்தி வருவதாக தெரிகிறது. வேறு எத்தாவது முறைகளில் பயன்படுத்த ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை தெரிய ஆசைப்படுகிறேன்.